# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2037/18 - 2017 සැප්තැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.09.21

*2037/18 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 21/78* (XV)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாக கருதப்படுகின்றதான இலங்கை மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதான (2017, பெப்புருவரி 08 ஆந் திகதிய 2005/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2006, நவெம்பர் 03 ஆந் திகதிய 1469/38 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படும் “பொறியியல் பீடம்” என்னும் விடயத்துக்கும் அதற்கான II ஆம் நிரலில் காணப்படும் அதன் நேரொத்த பதிவுகளுக்கும் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-

| “நிரல் I | நிரல் II |
|---|---|
| பொறியியல் பீடம் | 1. இரசாயன, செய்முறைப் பொறியியல் துறை |
| | 2. குடிசார் பொறியியல் துறை |
| | 3. கணினி விஞ்ஞான, பொறியியல் துறை |
| | 4. இலத்திரனியல், தொலைத்தொடர்பு பொறியியல் துறை |
| | 5. நில வளங்கள் பொறியியல் துறை |
| | 6. திரவியங்கள் விஞ்ஞான, பொறியியல் துறை |
| | 7. கணிதத் துறை |
| | 8. எந்திரப் பொறியியல் துறை |
| | 9. மின் பொறியியல் துறை |
| | 10. புடவை, ஆடை தொழில்நுட்பவியல் துறை |
| | 11. போக்குவரத்து மற்றும் தேவைகள், விநியோகங்கள் முகாமைத் துறை |
| | 12. மொழிகள் துறை”. |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2017, செத்தெம்பர் 14.

10-101


1A - PG 3700 — 508 (2017/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.